7th December 1959]

Madras Restriction of Habitual Offenders Act

* 13 *Q.*—SRI M. P. SARATHI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) Madras Restriction of Habitual Offenders Act-ஐ திருத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) எத்தகைய திருத்தம்?

(இ) எப்பொழுது கொண்டுவரப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) & (*c*) As the matter is in the proposal stage, it is not possible to furnish any further information at present.

House-breaking offences

* 14 *Q.*—SRI M. P. SARATHI: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் 1958-59-ல் நிகழ்ந்த house-breaking குற்றங்கள் எத்தனை? அவைகளில் சரியாகக் கண்டுபிடித்து தண்டிக்கப்பட்டவை எத்தனை?

(ஆ) House-breaking case-களில் விரல் முத்திரைப் பதிவு ஆய்வு முறைப்படி (finger-print science) புலன் விசாரணை செய்யப் போதிய வசதி உள்ளதா?

(இ) இந்த முறை எத்தனை கேஸ்களில் உபயோகிக்கப் பட்டது?

(ஈ) அதனால் ஏற்பட்ட பலன் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) 8,270 and 3,431 respectively.

(*b*) Yes, Sir.

(*c*) 1,075.

(*d*) On the whole, the results achieved by adopting this method are successful and satisfactory.

Increase in the emoluments of the karnams

* 18 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the branch of the Tamil Nad Karnams' Association, Tanjore, had given a memorandum on 2nd March 1959 to the Hon. the Chief Minister that their pay and allowance should be raised to those of lower division clerks of the Madras Ministerial Services and that they should be granted an interim allowance of Rs. 5 as granted to Non-Gazetted Officers; and

(*b*) if so, the steps taken by the Government on the memorandum?

[7th December 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The Cabinet Sub-Committee constituted to go into the grievances of the village officers in this State are already considering the various questions relating to the reorganization of the village establishments, service conditions, revision of scale of pay, etc. Hence no action was taken on the Memorandum.

SRI N. K. PALANISAMI : *ஸார் இவர்களுடைய சம்பள விஷயமாக இரண்டு மூன்று வருடங்களாக பரிசீலனை செய்தும் இதுவரை ஏன் சர்க்கார் ஒருவிதமாக முடிவும் எடுக்காமல் இருக்கிறது ? இதுவரை முடிவு எடுக்கவில்லை என்றால் இந்தப் பிரச்னையை பே கமிஷனிடத்தில் விடப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.*

THE HON. SRI M. A. MANICKAVELU : *இவர்களுடைய சம்பளத்தை மட்டுமல்ல, இவர்களுடைய சர்வீஸ், இவர்களுடைய பரம்பரை பாத்தியதை, இவர்களுக்கு கொடுக்கப்படும் சலுகைகள் இவைகளைப்பற்றி யெல்லாம் பரிசீலனை செய்து சப்-கமிட்டி சில சிபார்சுகளை செய்திருக்கிறார்கள். அவை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. கூடிய சீக்கிரம் இதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.*

SRI N. K. PALANISAMI : *ஸார், இந்த சப்-கமிட்டி சில சிபார்சுகளை கொடுத்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த சிபாரிசுகளில் எதைக்குறித்து எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி சொல்ல முடியுமா ?*

THE HON. SRI M. A. MANICKAVELU : *சம்பளத்தைக் குறித்து, சர்விஸைக் குறித்து, இவர்களுடைய வேலைமுறைகளைக் குறித்து, லீவு வசதியைக் குறித்து, இவைகள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. (சிரிப்பு.)*

SRI S. NAGARAJA MONIGAR : *ஸார், கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திலிருந்து இப்போது கிராம அதிகாரிகளாக இருந்து வருபவர்களை மாற்றி வேறு ஆட்களை நியமிக்கவேண்டும் என்றோ அல்லது இதே ஆட்கள் தொடர்ந்து இருப்பார்கள் என்றோ தெரியவில்லை. ஆகவே இதைப்பற்றி அரசாங்கத்தின் ஆலோசனை என்ன என்பதை திட்டமாக அறிய விரும்புகிறேன்.*

THE HON. SRI M. A. MANICKAVELU : *எல்லா யோசனைகளும் ஆலோசனையில் இருந்து வருகின்றன.*

SRI J. MATHA GOWDER : *ஸார், அடிப்படை சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டாலும், மலைப் பிராந்தியங்களில் இருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு உடனடியாக "ஹில் அலவன்ஸ்" கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?*

THE HON. SRI M. A. MANICKAVELU : *இந்தப் பிரச்னைகள் எல்லாம் மொத்தமாக தீர்க்கவேண்டியிருக்கிறது. இவைகளை எல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக கொடுப்பதைவிட ஒரேயடியாக இதற்கு ஒரு முடிவு கட்டுவதுதான் நல்லதாக இருக்கும். (சிரிப்பு).*

7th December 1959]

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகளுடைய வேலை முறைப்பற்றியும், அவர்களுடைய சம்பள விபரங்களைப்பற்றியும் அரசாங்கம் ஏறத்தாழ ஓராண்டு காலமாகப் பரிசீலனை செய்தும் இதுவரை எந்தவிதமான முடிவும் எடுக்கப்படாமல் இருப்பதின் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பரிதாபகரமான நிலையைப் போக்குவதற்கு உடனடியாக ஏதாவது சிறு உதவித் தொகையாவது இடைக்காலத்தில் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : என்னைப் பொறுத்த வரையில் இடைக்கால உதவி என்று கொடுப்பதைவிட நிரந்தரமாக கொடுப்பதுதான் நல்லது என்று கருதுகிறேன்.

SRI P. G. MANICKAM : கிராம சிப்பந்திகளான தலையாரிகளும், வெட்டியான்களும் சென்னை அரசாங்கத்தில் இருக்கின்ற எல்லா உத்தியோகஸ்தர்களையும் விடவும் மிகவும் குறைவான அளவில் அதாவது மாதம் 18 ரூபாய் பெறுகிறார்கள். இவ்விதம் மிகவும் குறைந்த சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கும் இவர்களுக்கு உடனடியாக ஏதாவது உதவி செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது ஒரு தொகையை கொடுத்து உதவுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இவர்களுக்கு கொஞ்ச காலத்திற்கு முன்னால்தான் சம்பளம் அதிகப்படுத்தப்பட்டது. இவர்கள்தான் மிகவும் குறைந்த சம்பளம் பெறுகிறார்கள் என்று சொல்ல முடியாது. இவர்கள் மற்ற உத்தியோகஸ்தர்களை போன்று முழு நேர உத்தியோகஸ்தர்கள் அல்ல. இவர்கள் இப்போது பலவிதமான சலுகைகள் பெற்று வருகிறார்கள். மற்றபடி இவர்களுக்கு கொடுக்கவேண்டிய எல்லா சலுகைகளும் நான் முன்னால் சொன்னபடி "மொத்தமாக பரிசீலனை செய்து" முடிவு எடுக்கப்படும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : This matter has been pending before the Government for a very long time. May I know when exactly the Government will take a decision?

THE HON. SRI M. A. MANICKAVELU : We are now at the last stage of the matter and everything will be finished in a short time.

SRI A. A. RASHEED : Will the Hon. Minister be pleased to state whether women karnams will also be allowed to hold office?

THE HON. SRI M. A. MANICKAVELU : In a recent decision, the High Court has said that women also can hold the office and that there can be no distinction between men and women under the Constitution.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த பரம்பரை பாத்தியதையை ஒழிப்பதுபற்றி இரண்டு வருடங்களாக பரிசீலனை செய்து கொண்டிருப்பதாக அரசாங்கம் சொல்லிக்கொண்டிருக்

கிறது. இப்போது அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறார்கள்? அவ்விதம் ஏதாவது முடிவு எடுக்கப்பட்டிருக் கிறது என்றால் அதை ஜில்லாக்களிலேனும் முதலாவதாக புகுத்தி பரிசிலனை செய்து பார்ப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்போது இருக் கின்ற பரம்பரை முறையை ஒழிப்பதற்கு வேண்டி அரசாங்கம் பரிசிலனை செய்யவில்லை. இப்போது இருக்கின்ற முறையை நீடித்துக்கொண்டிருக்கலாமா அல்லது வேறு முறையை ஏற்படுத்த வேண்டுமா என்பதைப்பற்றித்தான் ஆலோசனை செய்து கொண் டிருக்கிறோம். இதன் பேரில் கூடிய சீக்கிரம் முடிவு எடுக்கப்படும்.

SRI K. B. S. MANI: "லான்ட் ஸீலிங்" வரப்போகிற காரணத் தினால் அனேகம் பேர்கள் நிலங்களை விற்று வருவதின் மூலமாக மூன்று வருடங்களுக்கு வேண்டிய ஆதாயத்தை ஆறு மாதத் திற்குள்ளேயே இந்த கிராம அதிகாரிகள் எல்லாம் (வி.எச்.எம்) சம்பாதித்துக்கொண்டார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இவையெல்லாம் புரியாத விஷயமாக இருக்கிறது. இதற்கு பதில் சொல்வது முடியாத காரியம்.

11-30 a.m. SRI M. A. MUTHIAH CHETTIAR: Mr. Speaker, Sir, will the Hon. Minister be pleased to consider the advisability of continuing such of those hereditary officers who still remain in office?

THE HON. SRI M. A. MANICKAVELU: That is why in answering a previous supplementary question I said, the whole matter is under consideration. The examination is not to do away with them. We are just considering the whole matter.

SRI A. VEDARATHNAM: ஆலோசனையில் இருக்கும் இந்த விஷயம் சம்பந்தமாக முடிவெடுப்பதற்குக் காலதாமதம் ஆன போதிலும், இப்போது இந்த உத்தியோகஸ்தர்கள் கிராம மக்களிட மிருந்து வாங்கிவரும் மாமூலையாவது சட்டபூர்வமாக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: கிராம உத்தியோ கஸ்தர்கள் மட்டுமா மாமுல் வாங்கிவருகிறார்கள்? மற்றவர்களும் கூட மாமூல் வாங்கிவருகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன்.

SRI N. K. PALANISAMI: நிலவரி வசூலிக்கும் விஷயத்தில், கம்யூனிடி டெவலப்மெண்ட் ஏரியாக்களில் கிராம மணியகாரருக்கு பதிலாக வில்லேஜ் கைடுகளுக்கு அதிகாரம் கொடுக்க அரசாங்கத் திற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அது இப்போது பரிசிலனையில் இல்லை.

7th December 1959]

Sri K. SATTANATHA KARAYALAR : கிராம உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் முறை செங்கோட்டைத் தாலூகாவிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் வேறு விதமாக இருக்கிறது. அதையும் சேர்த்து இப்போது சர்க்கார் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறதா, அல்லது அங்கு இப்போதுள்ள முறை நீடிக்குமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : மற்றவைகளைப் பற்றிப் பரிசிலனை செய்யும்போது அதையும் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

Sri S. NAGARAJA MONIGAR : இந்த மாநிலத்தில் சில ஜில்லாக்களில் பரம்பரை பாத்தியதை முறையும் மற்ற சில ஜில்லாக்களில் அவ்வாறல்லாத முறையும் பல ஆண்டுகளாகவே அமலில் இருந்துவருகிறது. அப்படி இருக்க இவைகளைப்பற்றிய பரிசிலனைக்கு அவசியம் இல்லை என்று நம்புகிறேன்.

Mr. SPEAKER : நீங்கள் உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறீர்கள். அப்படி இல்லாமல் கேள்வி போடுங்கள்.

Sri S. NAGARAJA MONIGAR : நான் முன் கூறிய காரணங்களால், அரசாங்கம் இந்தப் பரிசிலனையில் சீக்கிரம் முடிவுக்கு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : The hon. Member is giving an opinion. This is not the occasion to give his opinion. If the hon. Member asks a question, I will allow him.

Sri S. NAGARAJA MONIGAR : Whether the Government will come to an early conclusion in regard to this matter was my question. I was not allowed to put my question.

Mr. SPEAKER : He should put it in the form of a question. His preface is longer than the question. He may put his question now.

Sri S. NAGARAJA MONIGAR : I have already put my question, Sir.

The Hon. Sri M. A. MANICKAVELU : இதை சீக்கிரமாக முடிப்பதுதான் சர்க்காரின் உத்தேசம்.

Sri P. U. SHANMUGAM : பரிசிலனை, பரிசிலனை என்று பரம்பரையாகப் பரிசிலனையில் இருக்கும் இந்த பரம்பரை பாத்தியதையை சீக்கிரமாக முடிக்க சர்க்காருக்கு என்ன உத்தேசம் இருக்கிறது ?

Mr. SPEAKER : இதற்குத்தான் கனம் அமைச்சர் ஏற்கனவே பதிலளித்தாரே !